


கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் முன்னிலையில் நடைபெற்றது, இதில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, வரும் டிசம்பர் 26 ம் தேதி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர்,சமூக நீதி காவலர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிகவும் பிரம்மாண்டமான வரவேற்பளிப்பது குறித்தும், எஸ்.ஐ.ஆர் (SIR) வரைவு வாக்காளர் பட்டியலில் நமது கழகத்தினர் உன்னிப்பாக கவனித்து விடுபட்டவர்கள் பற்றிய முழுமையான தகவல்களை சேகரித்து உரியமுறையில் இணைத்திட முனைப்புடன் செயலாற்றுவது குறித்தும் கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனை வழங்கினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் புதிதாக தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் 19.12.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, புதிய கல்லூரி வகுப்பு குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடினார். உடன் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்து

# சிறுபான்மையினருக்கு துரோகம் செய்த எடப்பாடியை மக்கள் நம்ப மாட்டார்கள்!

## ஆர்.கே. நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேச்சு!

சென்னை, டிச. 21-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி , ஆர்.கே நகர் மேற்கு பகுதி , 47 அ வட்ட திமுக சார்பில் கொருக்குப்பேட்டையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

அவர் பேசியதாவது :

கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு திராவிட முன்னேற்ற கழகம் 505 வாக்குறுதிகளை அளித்து, தேர்தலில் போட்டியிட்டது. 2011 முதல் 2021 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியினால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளான தமிழ்நாட்டு மக்கள், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு ஏகோபித்த ஆதரவை அளித்து ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்க வைத்தனர்.

முதன்முறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றுரைத்து முதல்வராக பொறுப்பேற்ற நமது கழகத் தலைவர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை மட்டுமல்லாமல், தேர்தலில் கூறாத வாக்குறுதிகளான காலை சிற்றுண்டி திட்டம், தாயுமானவர் திட்டம், பெற்றோர்களை இழந்த பிள்ளைகளை காக்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றி, தமிழ்நாட்டு மக்கள் மனதில் நீக்கமற நிறைந்துள்ளார்.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால்

ஆர்.கே. நகர் சட்டமன்ற தொகுதியில் முதல்வராக இருந்த அம்மையார் ஜெயலலிதா கூட எந்தத் திட்டங்களும் செய்யவில்லை, ஆனால் தற்பொழுது திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஆர்.கே. நகர் சட்டமன்ற தொகுதி, தன்னிறைவு பெற்ற தொகுதியாக உருமாறி உள்ளது.

இதே போல் தமிழ்நாடு முழுவதும் அனைத்து துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக, இந்திய ஒன்றியத்திலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை, கழகத் தலைவர் அவர்கள் வழிநடத்திச் செல்கிறார் .

**நீலிக்கண்ணீர் பழனிச்சாமி!**

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்து, திமுக ஆட்சியில் எதுவும் செய்யவில்லை என எடப்பாடி பழனிச்சாமி பச்சை பொய் சொல்கிறார். இவரது பேச்சை நம்ப தமிழ்நாட்டு மக்கள் தயாராக இல்லை.

அது மட்டுமல்ல கடந்த ஒன்றரை மாதமாக நடந்த SIR பணி தற்போது நிறைவடைந்து, இன்றைக்கு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டு இருக்கிறார்கள், இதில் சுமார் 1 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து எடப்பாடி பழனிச்சாமி கூறும் பொழுது, நீக்கப்பட்டது அனைத்தும் கள்ள ஓட்டு, அந்த ஓட்டை பயன்படுத்தி தான் திமுக ஆட்சிக்கு வந்தார்கள், அதனால் தான் அந்த வாக்குகளை நீக்கி விட்டார்கள் என்று கூறுகிறார்,




ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் 2017ம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில், இவர்களது குரூப்பைச் சேர்ந்த டிடிவி தினகரன் 20 ரூபாய் நோட்டை கொடுத்து மக்கள் ஓட்டை திருடி வெற்றி பெற்ற கதையை எல்லாம் மக்கள் இன்னும் மறக்கவில்லை,

இந்த லட்சணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை குறை கூற எடப்பாடிக்கு எந்த தகுதியும் கிடையாது.

ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையம் SIR என்ற சதித்திட்டத்தை கொண்டு வந்த போது, திமுக அதை முழுமூச்சோடு எதிர்த்தாலும், மக்களின் வாக்குகள் பறிபோகாமல் இருக்க, தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு தி.மு.க. தொண்டனும், வீடு வீடாகச் சென்று மக்களுக்கு வாக்குரிமை பெற்று தர பாடுபட்டார்கள்,

ஆனால் SIR யை ஆதரித்த எடப்பாடி பழனிச்சாமி, அதிமுகவிற்குள்ளேயே ஒரு வேடிக்கையான எஸ் ஐ ஆர் நடத்தினார், அதாவது அதிமுக வரலாற்றிலேயே இல்லாத அளவு ஆறு மாதத்திற்கு ஒருமுறை பொதுக்குழுவை கூட்டுகிறார், கடந்த பொது குழுவிற்கும் தற்போது நடந்த பொதுக்குழுவிலும் இறந்தவர்கள் யார் யார் என்று கணக்கெடுக்கிறார், இந்த பொதுக்குழுவில் பங்கேற்காமல் இடமாற்றம் செய்து வேறு கட்சிக்கு சென்றவர்கள் யார் யார் என்று கணக்கு எடுக்கிறார், பொதுக்குழுவில் பங்கேற்கும்போதே, எந்த கட்சியில் சேரலாம் என்று இரட்டை மனநிலையுடன் இருப்பவர்கள் யார் என்று கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்,

ஆனால் தற்பொழுது எடப்பாடி பழனிச்சாமிக்கே தெரியாத ஒரு கணக்கை நான் கூறுகிறேன்,

**பழனிச்சாமி உளறி வருகிறார்!**

SIR கணக்கெடுப்பின்படி தற்போது தமிழ்நாட்டின் வாக்காளர்கள் சுமார் 5,50 கோடி தான். இவற்றில் தேர்தலின் போது சுமார் 4.75 கோடி வாக்குகள் பதிவாகும் என்று கணக்கு வைத்துக் கொள்ளலாம். இவற்றில் 2.50 கோடி வாக்குகளை பெறுபவர் வெற்றி பெறலாம்.

திராவிட மாடல் அரசு கொண்டு வந்த கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் தற்போது பயனடையும் பெண்களின் எண்ணிக்கை 1.30 கோடி பேர். ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர் என்று கணக்கு வைத்தால் கூட 2.60 வாக்காளர்கள் திமுகவிற்கு வாக்களிப்பார்கள், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் மகளிர் உரிமைச் திட்டத்தில் பயன் பெறுகின்ற அதிமுக குடும்பத்தைச் சேர்ந்த பெண்களே திமுகவிற்கு வாக்களிக்க தயாராகி விட்டார்கள், இதிலிருந்து 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் திமுக தான் ஆட்சிக்கு வரும் என்று அனைத்து தரப்பினரும் இப்பொழுதே பேச ஆரம்பித்து விட்டார்கள், அந்த பயத்தால் தான் எடப்பாடி பழனிச்சாமி என்ன பேசுவது என்று தெரியாமல் ஏதேதோ உளறி வருகிறார்.

எப்படியாவது ஆட்சி அதிகாரத்திற்கு வர வேண்டும் என்று தமிழ்நாட்டில் மத கலவரத்தை தூண்டும் பாஜக வோடு கூட்டு சேர்ந்து கொண்டு, ஒன்றிய அரசு எத்தனை மக்கள் விரோத சட்டங்கள் கொண்டு வந்தாலும், அவற்றையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்து தமிழ்நாட்டு மக்களுக்கு குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு துரோகம் செய்யும் எடப்பாடி பழனிச்சாமியின் நயவஞ்சகத்தனத்தை தமிழ்நாட்டு மக்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்கிறார்கள், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், ஒன்றிய அரசு குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டு வந்த போது, எடப்பாடி பழனிச்சாமி ஆதரித்து வாக்களித்து, இஸ்லாமிய மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டு, தற்பொழுது சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக இருப்பதாக போடும் நாடகத்தை, நீலிக் கண்ணீரை சிறுபான்மை மக்கள் ஒரு போதும் நம்ப மாட்டார்கள். திராவிட முன்னேற்ற கழகம் மட்டும்தான் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக தொடர்ந்து திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது கூட ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த தேசத்திற்கு விடுதலை வாங்கித் தந்த மகாத்மா காந்தி அவர்களின் பெயரில் உள்ள 100 வேலை திட்டப்பெயரை மாற்றி ஜி ராம் ஜி, என்று ஏதோ புரியாத பெயரை வைத்துள்ளார்கள், இதை திமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் கடுமையாக எதிர்த்து குரல் கொடுக்கிறார்கள், ஆனால் எடப்பாடி பழனிச்சாமி இதற்கும் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக ஜால்ரா போடுகிறார்.

**சேதாரம் அவர்களுக்குத்தான்!**

தி.மு.க.வை எதிர்த்து பேசினால் பெரிய ஆளாகி விடலாம் என்று நேற்று முளைத்த காளான்கள் எல்லாம் வெறி கொண்டு பேசுகிறார்கள், அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன், திமுக என்பது பெரிய மலை போன்றது, மலையைப் பார்த்து யார் கத்தினாலும் , சேதாரம் எதிரிக்குத்தான்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் தமிழ் படங்கள் நன்றாக ஓடுவதால் தான், சிலருக்கு மார்க்கெட் கிராக்கி ஏற்பட்டு, அதன் மூலம் 100 கோடி 200 கோடி என்று பணம் சம்பாதிக்கிறார்கள், அதற்குக் காரணம் திமுக தான் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்க காரணம் கிடையாது, 1965ம் ஆண்டு தொடங்கிய இந்தி எதிப்பு போர் இன்று வரை சுடர் விட்டு எரிகிறது , இதன் காரணமாக தமிழ்நாட்டில் இந்தி திரைப்படங்கள், திரையிடப்படுவது தடுக்கப்பட்டு அதன் காரணமாக தமிழ் படங்களுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டது.

ஆனால் மும்பை உள்ளிட்ட வட மாநிலங்களில் இந்தி மொழி ஆதிக்கம் காரணமாக பிராந்திய மொழி படங்களுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். அந்த நன்றி உணர்ச்சி கூட இல்லாமல் திமுகவை சிலர் சீண்டி பார்க்க நினைக்கிறார்கள், திமுகவை சீண்டி பார்த்தவர்கள், திமுகவை எதிர்த்து கட்சி ஆரம்பித்தவர்கள் என்ன ஆனார்கள், அவர்கள் கட்சி எந்த நிலைக்கு ஆளானது என்பது வரலாறு சொல்லும்.

திமுகவின் வளர்ச்சி கண்டு, செல்வாக்கு கண்டு , பொறாமையில், வயிற்று எரிச்சலில் பேசுபவர்கள் பேசிக் கொண்டே இருக்கட்டும், திமுக தொண்டர்கள் அதைப் பற்றி கவலைப் பட வேண்டாம். உங்களது கவனம் எல்லாம் இனிவரும் ஒரு மாத காலம், வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பதிலும், விடுபட்ட வாக்காளர்களின் பெயர்களை சேர்ப்பதிலும், அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வினர் போலியாக சேர்த்துள்ள வாக்காளர்களை கண்டறிந்து அவற்றை நீக்குவதிலும் தீவிரம் காட்டுங்கள்.

**ஆட்சிக் கட்டிலில் அமர்வது உறுதி!**

திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவதற்கான வழிவகைகளை கழகத் தலைவர் அவர்களும், துணை முதலமைச்சர் தம்பி உதயா அவர்களும் பார்த்துக் கொள்வார்கள். நிச்சயம் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக நமது கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கட்டிலில் அமர்வது உறுதி.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., ஜே. ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள்

எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், சட்டத்துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் என் மருது கணேஷ், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் ஏ டி மணி, பொதுக்குழு உறுப்பினர் வே.சிவக்குமார் , வட்டச் செயலாளர் ஆர்.ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### 100 நாள் வேலைத் திட்டம்: ஒன்றிய அரசையும் – அ.தி.மு.க.வையும் கண்டித்து

# மதுரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, டிச. 21-

“தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து”

‘மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்’ சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தி.மு.க தலைமைக் கழக அறிவிப்பின்படி, “தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் - சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து” மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் 24.12.2025 புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் மதுரை தினமணி தியேட்டர் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒத்து ஊதும் அ.தி.மு.கவிற்கு எதிரான தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.


இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டில் நூறுநாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் வருகிற 24ஆம் தேதி நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ தலைமையில், கழக மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த அனைத்துக்கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பி. தம்பித்துரை
### டிசம்பர் 21 (1990)



“நெல்லை இரட்டையர்கள்” என்று அழைக்கப்பட்ட இரட்டையர்களில் இவரும் ஒருவர்.

கழகத்தில் தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளை வகித்தவர்.

கண்டிகைப் பேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – மானூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும் – திருநெல்வேலி நகராட்சி உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.